# எ.எம்.எ.அசீஸ் - தூர தரிசனம் மிகுந்த கல்வி மேதை

( பேராசிரியர் றைஹானா ரஹீம் )

ஒக்டோபர் 4ஆந் திகதி பேரறிஞர் எ.எம்.எ.அசீஸ் அவர்கள் பிறந்த நாளாகும் அன்னார் வாழ்ந்திருந்தால், இவ்வருடம் ஒரு நூற்றாண்டைத் தாண்டி 109 வருடங்கள் நிறைவு பெற்றிருக்கும். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் அவதரித்த அன்னார், காலப்போக்கில் முஸ்லிம் சமூகத்தின் அணையாது ஒளிபரப்பிய தீபச் சுடராகத் திகழ்ந்தார். முஸ்லிம் சமூகத்தின் கல்வித்துறையில், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒரு கல்வி மேதையாகவும், நாட்டை ஒன்றிணைப்பதற்கு பன்மை மொழிக் கொள்கை அவசியம் என இதற்கு ஆதரவு வழங்கிய தமிழ் மொழி வித்தகவராகவும், தன்னுயை நாடும் சமூகமும் செழிப்புற்று ஓங்கி வளர வேண்டும்மென்ற உன்னத நோக்கத்தை அடைய உழைத்த தூர தரிசனம் மிகவும் பெற்றிருந்த ஒரு செயலூக்கத் தலைவராகவும் விளங்கினார்.

அசீஸ் அவர்களின் தொழிற் திறன்கள் ஆவணப்படுத்தப்பட்டு இருந்த போதிலும், அவருடைய வாழ்க்கைச் சரிதையை மீள்நோக்கிப் பார்க்கும் போது அவரினுள் பற்பல பண்புகள் இழையோடி இருந்ததை அறிய முடியும், தான் விரும்பித் தெரிவு செய்த தொழில் துறையில் தன்னுடைய விருப்புக்களையும் அபிலாசைகளையும் நிறைவு செய்து அடைந்து கொள்வதை விடவும், தன்னுடைய நாட்டுக்கும் சமூகத்திற்கும் தன்னுடைய கடமைகளைச் செய்ய வேண்டியது முக்கியம் என்ற உயர்ந்த உணர்வுகளைக் கொண்டிருந்த அன்னார், தான் வகித்த உயர் பதவிகளையும் துறந்து வேறு வழியில் தன்னுடைய சேவைப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்த அற்புத மனிதன், அசீஸ் அவர்கள் ஆகும்.

அவருடைய புலமை மிகுந்த கல்வி ஆற்றல், அவர் ஒரு சாதனையாளர் என்பதைத் தெளிவாக்குகின்றது. பல்கலைக்கழகக் கல்லூரியின் அனுமதித் தகைமை பெற்றிருந்தும், தன்னுடைய வயது குறைவான காரணத்தினால், ஒரு வருடம் தாமதித்தே பல்கலைக்கழகக் கல்லூரியில் அனுமதி பெற்றார். லண்டன் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் சிறப்புப் பட்டம் பெற்ற அவருக்கு, கேம்பிரிஜ் புனித கதரின் கல்லூரியில் பட்டப் படிப்பைக் கலைத்துறையில் தொடர்வதற்கு அரசினால் புலமைப் பரிசில் வழங்கப்பட்டது. அவ்வேளையில், அரச சேவையில் அதிக கீர்த்தி மற்றும் அதியுயர் மதிப்புடனும் போற்றப்பட்ட இலங்கை சிவில் சேவைப் பரீட்சையில் சித்தி அடைந்த காரணத்தால், அசீஸ் அவர்கள் இலங்கைக்குத் திரும்பி வரவேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த அதியுயர் சாதனைப்படைத்த முதலாவது முஸ்லிம் அசீஸ் அவர்களே. சுகாதாரம், சுங்கம், திறைசேரி உள்ளிட்ட பல்வேறு அரச திணைக்களங்களில், சிவில் சேவை அதிகாரியாகத் தன்னுடைய பணிகளைத் திறம்பட நிறைவேற்றினார்.

அன்றைய கால கட்டத்தில் நாட்டின் அதிமுக்கியமான தேவை உணவு உற்பத்தியாக இருந்ததினால், அப்போதைய விவசாய அமைச்சராக விளங்கிய, மாண்புமிகு டி.எஸ். சேனாநாயக்க அவர்கள், உணவு உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கத்துடன், சிவில் சேவை அதிகாரியாக திறம்பட பணியாற்றிய அசீஸ் அவர்களைத் தேர்ந்து எடுத்து, கல்முனைக்கு உதவி அரசாங்க அதிபராக அனுப்பி வைத்தார். கிழக்கு மாகாணத்தில் உணவு உற்பத்தியைத் துரிதப்படுத்தி மேம்படுத்துவதற்கு அனுப்பி வைக்கப்பட்ட அசீஸ் அவர்களின் அளப்பரிய அமிதமான சேவைத்திறன் இங்கேதான் வியாபித்து விளங்கியது. அசீஸ் அவர்கள் அப்பகுதி விவசாயிகளுக்கு உதவியும் ஊக்கமும் அளித்து அயராது உழைத்தார். காணியற்ற விவசாயிகளுக்குக் காணிகள் வழங்கினார். கைவிடப்பட்டிருந்த கிராமக் குளங்களையும் நீர்ப்பாசனக் கால்வாய்களையும் புனர்நிர்மாணம் செய்தார். நவீனமயமான விவசாய வழிமுறைகளை அறிமுகப்படுத்தி மாதிரி விவசாயப் பண்ணைகளை அமைத்தார். ஆடு, கோழி வளர்ப்பையும் ஆரம்பித்தார். 1942 ஆம் ஆண்டில் உதவி அரசாங்க

அதிபராக கடமைகளை ஏற்ற அசீஸ் அவர்களின் பாரிய முயற்சிகள், ஒரு வருட காலப்பகுதியினுல் அதாவது 1943 ஆம் ஆண்டில் பெருமளவிலான பயன்களை அளித்தன.

உணவு உற்பத்தியின் மகத்தான வெற்றியாக "அறுவடை விழா" கொண்டாடப்பட்டது. இந்த வெற்றிக்கு முற்று முழுதாக பங்களிப்பு வழங்கிய அசீஸ் அவர்களின் பிரயத்தனத்தை 1943ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் திகதி "ஒப்சேவர்" பத்திரிகை, இவ்வாறு பாராட்டிப் புகழாரம் சூட்டியது.

" உணவு உற்பத்தியைத் துரிதப்படுத்தி வளர்ச்சி வெற்றி பெறுவதற்கு
உதவிய உத்திகளான விடா முயற்சி, ஊக்கமூட்டும் வழிகாட்டல்,
துல்லியமான திட்டமிடுதல் ஆகிய செயற்திறன்களுக்கு , ஒளிபரப்பிப்
பிரகாசிக்கும் உதாரணமாக இந்த நிகழ்வு விளங்குகின்றது."

அன்று தொடக்கி வைக்கப்பட்ட நற்பணி காரணமாக , கிழக்கு மாகாணம் இலங்கையின் முக்கியமான நெல் விளைவிக்கின்ற பிராந்தியமாக இன்றும் திகழ்கின்றது. இதற்கு மூலகர்த்தாவாகிய அசீஸ் அவர்களின் பெயர், கிழக்கு மாகாண அக்கரைப்பற்று சாகமம் எனும் பகுதியில் 500 ஏக்கர் நெற்செய்கைக் காணிப்பரப்பு, "அசீஸ் துரைக் கண்டம்" என்று பெயரிடப்பட்டு இன்றும் நினைவு கூரப்படுகின்றது.

பதின்மூன்று வருடங்களாக அரச பணி புரிந்து பெயரும் புகழும் பெற்றுவந்த அசீஸ் அவர்கள், தன்னை எதிர் நோக்கி இருந்த அரச உயர் பதவிகளைத் துறந்து, இன்னுமொரு பணிக்காகத் தன்னை அர்ப்பணிப்புச் செய்து கொண்டார். அதுதான் முஸ்லிம் இளைஞர்களுக்கான கல்விப் பணி. இந்தப் பணி கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றதும் ஆரம்பமாகியது. அவருடைய அதிபா் பதவிக்காலம், ஸாஹிராக் கல்லூரியின் "தங்கமான காலம்" என்று வர்ணிக்கப்பட்டதுடன், அவர் ஓர் அதிசிறந்த அதிபராகப் பலராலும் போற்றப்பட்டார்.

அசீஸ் அவர்களின் ஆக்க சக்தி நிறைந்த உள் மனதில், கல்வி பெறுவதற்குப் பண உதவி அவசியம் என்ற உண்மை உருவாகிய காரணத்தால் , வசதிகுன்றிய மாணவர்களுக்கு உதவும் நோக்குடன் "இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதியத்தை" உருவாக்கினார். இலங்கையின் சில பகுதிகளில் நிறுவப்பட்டிருந்த முஸ்லிம் வாலிப இயக்கங்களை ஒன்றிணைத்து, "அகில இலங்கை முஸ்லிம் வாலிப இயக்கங்களின் சம்மேளனத்தை உருவாக்கியமை அன்னாரின் இன்னுமொரு மகத்தான சேவையாகும். இந்தச் சாதனைகள் பொருத்தமாக நினைவு கூர்ந்து கொண்டாடப்பட்டு வருகின்ற அதேவேளை, அசீஸ் அவர்கள் முஸ்லிம் சமூகத்திற்கு ஆற்றிய மாபெரும் சேவைகளையும் கோடிற்றுக் காட்டுகின்றன.

அசீஸ் அவர்கள், ஒரு பாரிய தூரதரிசனத்தைக் கொண்டிருந்த மகாமேதை ஆவார். தன்னுடைய சிறிய அளவிலான சமய மற்றும் சமூக மட்டத்தில் மட்டும் அல்லாமல், அன்னாரின் வாழ்நாள் அனுபவங்கள், அன்னாரின் வியாபித்த வாசிப்புப் பழக்கங்கள், பயண அனுபவங்கள், வகித்த பல்வேறு உயா் பதவிகள் - இவை அனைத்தும் அவரை இந்த உலகம் குறித்து ஒரு பரந்த நோக்கத்தை கொண்டிருந்த தலைவராகப் பரிமளிக்கச் செய்தன.

சிறுவகான இருந்த வேளை முஸ்லிம் மதரசா ஒன்றுக்குச் சென்ற அசீஸ், பின்னர் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயம் மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பெருமைக்குரிய பழைய மாணவனாகத் திகழ்ந்தார். கிழக்கு மாகாணத்தில், தமிழ் மற்றும் முஸ்லிம் விவசாயிகளைத் தன்னுடைய விவசாயத் திட்டங்கள் ஊடாக ஒன்று படுத்தினார். அவருடைய அதிபர் காலம், ஸாஹிராக் கல்லூரியின் "தங்கமயமான காலமாக " த்திகழ்ந்தமை அந்தக் கல்லூரியை அங்கீகரிப்பட்ட தேசியப் பாடசாலையாக மாற்றியது மட்டுமல்லாமல், கல்லூரி கல்வியில் சிறந்து விளங்கிய காரணத்தால், அனைத்துச் சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களும் கல்வி கற்க அணிதிரண்டமையும் ஆகும்.

“செனேற்” சபை உறுப்பினராக விளங்கிய அசீஸ் அவர்கள் இலங்கை பல்லின, பன்மைக் கலாசாரங்கள் கொண்ட ஓர் இலட்சிய நாடு என்றே தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளார். அவா் அரச மொழிச் சட்டத்தின் போது செனேற் சபையில் நிகழ்த்திய உரையின் பின்வரும் பகுதி இதற்குச் சான்றாகும்.

“நாம் நமது நாட்டை வேற்றுமையில் ஒற்றுமை
காண்பதும் மூலம் மட்டுமே கட்டி எழுப்ப முடியுமே தவிர
எம்முடைய கலாசாரங்களைக் கைவிட்டு விடுதல் ஊடாக அல்ல”

ஒரு சிறந்த கல்வி மேதை என அசீஸ் அவர்களுக்கு வழங்கப்பட்ட புகழாரங்கள் அனேகமாக அவர், ஆண்கள் பாடசாலையான ஸாஹிராக் கல்லூரியில் படைத்த சாதனைகள் காரணமாக இருந்த போதிலும் அன்னார் தொடர்பான முஸ்லிம் பெண்களின் கல்வி தொடர்பாகவும் அதற்கான உரிமை சம்பந்தமாகவும் சிறிதளவு விபரங்களே உள்ளன. இஸ்லாமிய விழுமியங்கள் மற்றும் சமகால மேற்குலக நிலைமைகள் ஆகியவற்றுடன் இணங்கும் வண்ணம், ஆண் பெண் இரு பாலாரினதும் கல்வி அமைய வேண்டும் என்ற தன்னுடைய தனிப்பட்ட கருத்துக்களை தெளிவுபடுத்தி இருந்துள்ளார். இவ்வாறான கல்வி பெறுதல் ஆண், பெண் இரு பாலாருக்கும் சிரமமாக இருக்காது, என்றும் இஸ்லாம் ஏனைய மத நிறுவனங்கள் ஊடாகவும் இந்த இலட்சியத்தை அடைய முடியும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார். இந்தக் கருத்துக்களை முஸ்லிம் சமூகத்தினரிடையே தெளிவுபடுத்தி, ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் கல்வி அவசியம் என்ற கருத்துக்கு மக்களின் இணக்கத்தையும் பெற்றிருந்ததுடன், தன்னுடைய மகள் மரினா அவர்களைக் கிறிஸ்தவக் கல்லூரியான “லேடீஸ் கல்லூரியில்” சேர்ந்து, அவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாக வெளியாவதற்கு வழி அமைந்திருந்தார். இன்று பல முஸ்லிம் பெண்கள், பல துறைகளிலும் பணி புரிவதற்குச் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளமைக்கு, அவர் பெண்கள் கல்விக்கு வழங்கிய ஊக்கமும் அங்கீகரிக்கப்படுதல் பொருத்தமாகும்.

1973 ஆம் ஆண்டில் ஒப்பிட்டு அளவில் 62 இள வயதில் மரணம் அடைந்த, தன்னுடைய மறைவுக்குப் பின்பு ஒரு “தேசிய வீரனாக” க்கௌரவிக்கப்பட்டார். ஒரு சிறு கிராமத்தில் பிறந்து, நாட்டின் அனைத்து மக்களின் நலனுக்காகவும் பெரும் தொண்டாற்றிய அன்னாரின் சாதனைகள், அன்னாரின் அளப்பரிய சேவைகளுக்குச் சான்று பகிர்கின்றன. அவருடைய தனிப்பட்ட வாழ்கையில் அவருடன் பழகியவர்கள், அன்னார் ஓர் ஆர்வமுள்ள, கருணை உள்ளம் படைத்த, எல்லோருக்கும் உதவும் பண்பைக் கொண்டிருந்தார் என அன்னாரை நினைவு கூருகின்றனா். என்னுடைய தாயாரின் நெருங்கிய உறவினரான அன்னார், எனக்கு “அசீஸ் மாமா” வாகவே விளங்கினார். அசீஸ் மாமாவும் உம்மு மாமியும் எங்களுடைய பெற்றோரின் உறவினர்களாக விளங்கியது மட்டுமல்லாமல் இரு குடும்பங்களின் சுகதுக்கங்களில் பங்கு கொண்ட நம்பகமான நண்பர்களாகவும் வாழ்ந்தார்கள். அசீஸ் மாமா அவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு ஆலோசனைகள் வழங்கி நல்வழி நடத்தினார். நான் “லேடீஸ்” கல்லூரியிலிருந்து பேராதெனியப் பல்கலைக்கழகத்திற்கும் அதைத் தொடர்ந்து கல்வித் துறையில் ஈடுபடுவதற்கும் சாத்தியமான வழிகாட்டல்களை வழங்கி உற்சாகம் ஊட்டியவா் எ.எம்.எ. அசீஸ் அவா்களே. அன்னார், ஒரு தூரதரிசனம் மிகுந்த உணர்வுபூர்வ உத்தமன் ஆவார்.

(பேராசிரியா் றைஹானா றஹீம் அவர்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சேவையாற்றிய கௌரவமான ஓய்வு பெற்ற பேராசிரியா் ஆவார். மேலும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஸ்தாபகப் பணிப்பாளர் ஆவார்.)

– தமிழில் : எஸ்.எம்.எம்.யூசுப்